

சேலத்தில் நடைபெற்ற மாநில இளைஞர் அணி இரண்டாவது மாநாட்டிற்கு திருப்பூர் தெற்கு மாவட்டம், மடத்துக்குளம் மேற்கு ஒன்றியம், ஜோத்தம்பட்டி ஊராட்சி அரியநாச்சிபாளையம் கிராமத்தைச் சார்ந்த பாகம் எண் 241 பூத் கமிட்டி உறுப்பினராக உள்ள இளைஞர் அணியை சார்ந்த ச.சதீஷ்குமார் மாநாட்டிற்கு சென்று திரும்பி வரும் வழியில் அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டு அகால மரணம் அடைந்தர். கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி தி.மு.கழகத்தின் சார்பில் கழக துணை பொதுச் செயலாளர், மத்திய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து ரூபாய் 2 இலட்சம் நிதியை வழங்கினார். இதில் கழக மருத்துவர் அணி துணைச் செயலாளர் மருத்துவர் கோகுல், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு. ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் இராமசாமி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் விக்னேஷ்குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் ஜெயக்குமார், சேதுபால், பாலமுரளி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கௌதம்ராஜ் உள்பட பலர் உள்ளனர்.





மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சி.பழனி, தலைமையில், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில் புதியதாக கட்டப்பட்டு வரும் மருத்துவமனை கட்டிடங்களை நேற்று முன்தினம் (29.01.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். உடன் திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்யான்ஷி நிகம், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி ஆர்.நிர்மலா பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் பரிதி, இணை இயக்குநர் மரு.லட்சுமணன், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி தமிழ்ச்செல்வி உட்பட பலர் உள்ளனர்.




நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மற்றும் திருச்செங்கோடு நகர தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சங்ககிரி ரோடு ரவுண்டானா அருகில் நடைபெற்றது. நகரக் கழகச் செயலாளர் மற்றும் நகர மன்றத் துணைத் தலைவர் கார்த்திகேயன் தலைமையில் நடந்த கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் மதுரா செந்தில், தலைமைக் கழகப் பேச்சாளர்கள் திருப்பூர் மனோகர் பாபு, குன்னூர் கலீம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

## திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனையில்

# புதிய மருத்துவமனைக் கட்டிடங்கள் கட்டும் பணி!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

திண்டிவனம், ஜன. 31 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் சி.பழனி தலைமையில், திண்டிவனம் தலைமை அரசு மருத்துவமனையில், புதிய மருத்துவமனை கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதை நேற்று முன்தினம் (29.01.2024) பார்வையிட்டு, ஆய்வு செய்தனர்.

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், செஞ்சி மஸ்தான் ஆகியோர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2022 ஜனவரி திங்களில், தமிழ்நாட்டில் 25 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அறிவிக்கப்பட்டது. ஏற்கனவே, தமிழகத்தினை பொறுத்தவரை 19 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் இருந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் , மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அதிக எண்ணிக்கையில் வர வேண்டும் என்பதன் அவசியம் கருதி, 19 புதிய மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும், 6 இடங்களில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு இணையாக அமைக்கப்படும் என்று அறிவித்தார் . அதனடிப்படையில் இதற்காக ரூ.1,100 கோடி நிதி ஒதுக்கீடும் செய்துகொடுத்துள்ளார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு பணிகள் வேகமாக நடைபெற்ற வண்ணம் உள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தை பொறுத்தவரை, முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையினை தொடர்ந்து, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைத்திட உத்தரவிட்டார்கள். மேலும், இதன் கட்டமைப்பினை அதிகரித்திட வேண்டும் என்ற நோக்கத்தில் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் புதியதாக மருத்துவமனை கட்டடங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். தற்பொழுது, இதற்கான கட்டுமானப்பணிகள் விரைவாக நடைபெற்று கொண்டிருக்கிறது.

திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில், ரூ.60.00 கோடி மதிப்பீட்டில், தரைத்தளம் மற்றும் ஐந்து தளங்கள் தலா 1935.00 ச.மீ பரப்பளவு வீதத்திலும், சாய்தள பரப்பு 700.00 ச.மீ, இணைப்பு பகுதி 95.00 ச.மீ என மொத்தம் 12,475 ச.மீ பரப்பளவில் அமையவுள்ளது. இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் 1,000 ச.மீ பரப்பளவில் மகப்பேறு மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை கட்டடமும், தரைத்தளத்தில் 166.00 ச.மீ பரப்பளவில் பிணவறைக் கட்டடமும், 63.00 ச.மீ பரப்பளவில் எச்.டி அறையும் கட்டப்பட்டு வருகிறது.

திண்டிவனம் அரசு தலைமை மருத்துவமனையில் கட்டிடப்பணிக்காக ரூ.40.00 கோடியும், ரூ.20.00 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை இயந்திரங்கள் மற்றும் உள்கட்டமைப்பு தேவைக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிய மருத்துவமனை கட்டிடத்தில், தரைதளத்தில், காத்திருப்பு பகுதி, மருந்தகம், எக்ஸ் கதிர், எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் வி.டி. ஸ்கேன், கோப்புகள் அறை, புறநோயாளிகள் வார்டு, மீட்பு அறை, மருத்துவர் அறை, அவசர சிகிச்சைப் பிரிவு, விபத்து பிரிவு, காவலர் விசாரனை பிரிவு, பதிவறை, பணி நேர மருத்துவர் அறை, பணிநேர செவிலியர் அறை, கழிவறையும், முதல் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக் கருவிஅறை, பணிநேர மருத்துவர்கள் அறை, பணி நேர செவிலியர்கள் அறை, தனிமைப்படுத்தப்பட்ட அறை, குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு, இரண்டாம் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக்கருவிகள் அறை, பணிநேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, மருத்துவ வார்டு, சேமிப்பு அறை, சரக்கறை, குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவு, உயர்சார்பு அலகு குழந்தைகள் பிரிவு, உயர்சார்பு அலகு வார்டு, தனிமைப்படுத்த அறை, கழிவறை, மூன்றாம் தளத்தில், சிகிச்சை அறை, மருத்துவக் கருவிகள் அறை, பணிநேர மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அறை, மருந்தகம், தனிமைப்படுத்தப்பட்ட அறை, அறுவை சிகிச்சைக்குப்பின் வார்டு (குழந்தைகள்), நான்காம் தளத்தில், மீட்பு அறை, நோயாளிகள் கண்காணிப்பு அறை, பணிநேர செவிலியர் அறை, பரிசோதனை அறை, சரக்கறை, கருத்தடை மற்றும் சுத்தம் செய்யும் அறை, அறுவை சிகிச்சை தியேட்டர் 5 எண்கள், கழிவறை, ஐந்தாம் தளத்தில், கருத்தரங்கு அறை, காத்திருப்பு அறை, எம்.ஆர்.டி அறை, அறுவை சிகிச்சை அறை, தீப்புண் சிகிச்சைப் பிரிவு, தனிமைப் படுத்தப்பட்ட அறை கழிவறை போன்ற பல்வேறு பிரிவுகளுடனும், மின் தூக்கி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகளுடன் மருத்துவமனை கட்டடம் அமையவுள்ளது.

திண்டிவனம் ஒட்டிய கிராமப்புற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அவசர மருத்துவ என்றால் விழுப்புரம் அல்லது புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையினை நாடிச்செல்கின்ற நிலை இருந்து வந்தது. தற்பொழுது திண்டிவனத்தில் மாவட்ட அரசு தலைமை அமைக்கப்பட்டு தரம் உயர்த்தப்பட்டு வருவதால், இப்பகுதியினைச் சேர்ந்த மக்கள் இந்த மருத்துவமனைகளிலே சிகிச்சை பெற்றுச்செல்கின்ற நிலை உருவாக உள்ளது என அமைச்சர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில், திண்டிவனம் சார் ஆட்சியர் திவ்வாயன்ஷி நிகம், திண்டிவனம் நகர்மன்ற தலைவர் திருமதி ஆர்.நிர்மலா, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.லட்சுமணன், துணை இயக்குநர் (சுகாதார நலப்பணிகள்) மரு.செந்தில்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.பரிதி, திண்டிவனம் நகராட்சி ஆணையர் திருமதி தமிழ்ச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சேலம் கிழக்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு தினம்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், ஜன. 31 -

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள் வருமாறு:

அறிவுலக மாமேதை திராவிட இயக்க ஆசான் தி.மு.கழக நிறுவனர் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் பிப்ரவரி 3ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.சமூக நீதி, மாநில உரிமை, மொழி உரிமை தொடர்பான சிந்தனையாளர், அந்த சிந்தனையை வெற்றிகரமாக அரசியல் படுத்தியவர். அப்படி அரசியல் படுத்துவதற்காக மேடை, பத்திரிகை, நாடகம், சினிமா, நூல்கள் என்று எல்லா ஊடகங்களையும், கையில் எடுத்து அதற்குப் புதிய தோற்றமும், உள்ளடக்கமும் தந்தவர் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு எனும் தாரகமந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற தம்பிமார் பெரும்படையைக் கண்டு நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழி நின்று அண்ணாவின் கொள்கைக் கோட்பாடுகளை துளியும் பிசகின்றி காத்து அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகப் பேரியக்கத்தை கோடிக்ககணக்கான தொண்டர்களையும் அனுதாபிகளையும் கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வழிநடத்தி வந்தார்கள். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழி நின்று செயல்படும் கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுரைப் படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை ஒவ்வொரு கழக தொண்டனும் அனுசரித்திட வேண்டும்.

அதன்படி சேலம் கிழக்கு மாவட்டத்தில் 03.02.2024 - சனிக்கிழமை அன்று கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் (எனது) தலைமையில் வாழப்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் காலை 9 மணியளவில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

எனவே மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுக்குழு , செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், செயலாளர்கள் , ஒன்றிய குழு தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக செயலாளர்கள், வார்டு செயலாளர்கள் ,சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கழக முன்னோடிகள் மற்றும் பொது மக்கள் என அனைவரும் பெரும் திரளாக பங்கு பெற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சேலம் மத்திய மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு தினம்!

## மாவட்டச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் அறிக்கை!

சேலம், ஜன. 31 -

சேலம் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.இராஜேந்திரன் வேண்டுகோள் வருமாறு:

சேலம்மத்தியமாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் அறிவுலக மேதை, தென்னாட்டுக் காந்தி பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தை தோற்றுவித்து தமிழ்ச் சமுதாய மக்களின் நலனுக்காக அயராது பாடுபட்டவர்.

தமிழகத்தில் இருமொழிக் கொள்கை, சென்னை மாகாணம் என்பது தமிழ் நாடு என பெயர் மாற்றம், சுயமரியாதை திருமணம் என ஆட்சி பொறுப்பேற்றதும் அனைத்தையும் சட்டமாக்கி மாற்றங்களை உருவாக்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள். தமிழக அரசியல்வரலாற்றில்கழகத்திற்கென தனிப்பாதையை உருவாக்கிகடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை நமக்கு வகுத்து தந்து அரசியல் பயணத்தில் வெற்றி கண்டவர் அண்ணா அவர்கள். இவ்வளவு சிறப்புகளையும், ஆற்றலையும்கொண்ட அண்ணா அவர்களின் நினைவை போற்றும் வகையில் சேலம் மத்திய மாவட்ட திராவிட முன்னேற்றக்கழகத்தின்சார்பில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து பிப்ரவரி 3ஆம் நாள் சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு அமைதி ஊர்வலம் புறப்பட்டு வள்ளுவர் சிலை, பழைய பேருந்து நிலையம் வழியாக பேரறிஞர் அண்ணா சிலையை அடைந்து சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக்கழக, மாநகர கழக, ஒன்றியகழக, பகுதிகழக, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுக் குழு செயற்குழுஉறுப்பினர்கள், கழக முன்னோடிகள், மாவட்டக் கழக பிரதிநிதிகள், மாநகரகோட்டக்கழக செயலாளர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, அயலக அணி, அமைப்பு சாராஓட்டுநர்அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சிறுபா ன்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர்அணி,மீனவர்அணி,ஆதி திராவிடர் நலக்குழு ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர்அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்னார்கோவில் ஒன்றியம் பரசலூர் ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபா கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கலந்து கொண்டு பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், ஒன்றிய குழுத் தலைவர் நந்தினிஸ்ரீதர், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் துளசிரேகா, ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம் மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை ஒன்றியம் மஞ்சக்கொல்லை ஊராட்சியில் குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானி டாம் வர்கீஸ் ஆகியோர் தலைமையில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் விழிப்புணர்வு மற்றும் தொழுநோய் காசநோய் விழிப்புணர்வு, வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுக்கப்பட்டது. உடன் கூடுதல் ஆட்சியர் ரஞ்சித்சிங், ஊராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி பாஸ்கர் மற்றும் பலர் உள்ளனர்.




பட்டுக்கோட்டையில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்கநாளை முன்னிட்டு தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாணவர் அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ தலைமையில் திராவிட இயக்க எழுத்தாளர் வே.மதிமாறன், தலைமைக் கழக பேச்சாளர் வீர.வெள்ளைச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இக்கூட்டத்தில் மாநில தணிக்கைக்குழு உறுப்பினர் ப.பாலசுப்ரமணியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பழஞ்சூர் செல்வம், நகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.என்.செந்தில்குமார், உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகள் ரா.மணிகண்டன், கா.சு.கார்த்திகேயன், ஜி.வி.விக்னேஷ், கே.மாணிக்க வாசகம், த.சுகந்தி, அ.கண்ணதாசன் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி.ஆர்.ஜெய் ஸ்டாலின் ஏற்பாட்டில் மாவட்ட கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை திருக்கோகர்ணம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணாக்கர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, பெ.ராஜேஸ்வரி, மாவட்டப் பொருளாளர் எம்.லியாகத் அலி, திலகவதி செந்தில், ரமேஷ், முனைவர் சாமி.சத்தியமூர்த்தி, குரு.மாரிமுத்து, லதா, அ.ரெத்தினம், மு.கலைஞர் கருணாநிதி, மு.இளஞ்சேரன், சின்னையா, மு.தென்னரசு, சத்தியமூர்த்தி, சதீஸ்குமார், முத்துக்குமார், ரெங்கராஜன், மணிவேலன், பழனிவேல், நாகராஜ், கண்மணி சுப்பு, க.பிரபு, அடைக்கலம், எழில் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பெற்றோர் – ஆசிரியர் கழக தலைவர், ஆசிரியப் பெருமக்கள், மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.